<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், செய்யாறு.</u>

<u>O.S.No.08/2023</u>

| | |
|---|---|
| வாதி தரப்பு சாட்சி | **வா.சா. 1** |
| பெயர் | திருமதி. பச்சையம்மாள் |
| கணவரின் பெயர் | திரு. செல்வராஜ் |
| கிராமம் | வெள்ளகுளம் |
| வட்டம் | வெம்பாக்கம் |
| தொழில் | விவசாயம் |
| சாதி | |
| மதம் | |
| வயது | 50 |

2025–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 17–ஆம் நாளன்று, திரு.M.விக்னேஷ் பிரபு, M.L., கூடுதல் சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் 1969–ஆம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>முதல் விசாரணை</u> :**

1. நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை முதன்மை சாட்சியமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதனை நான் சொல்லிதான் எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. அதனை படித்து பார்த்து, வழக்கறிஞர் படித்து சொல்ல சரியென்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தேன். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்து குறியீடு செய்கிறேன்.

| வ.எண். | தேதி | ஆவணங்கள் |
|---|---|---|
| 1. | 07-04-2022 | தாவா 1-வது அயிட்ட சொத்திற்கான கணினி சிட்டா (பட்டா எண். 474) - இணைய வழி நகல் - வா.சா.ஆ.1. |
| 2. | 07-04-2022 | தாவா 2-வது அயிட்ட சொத்திற்கான கணினி சிட்டா (பட்டா எண். 167) - இணைய வழி நகல் - வா.சா.ஆ.2. |
| 3. | 06-04-2022 | தாவா 3-வது அயிட்ட சொத்திற்கான துணை வட்டாட்சியர் வழங்கிய நத்தம் நில வரி சிட்டா சான்று நகல் (பட்டா எண். 80) - வா.சா.ஆ.3. |
| 4. | 12-09-2022 | வில்லங்க சான்றிதழ் - கணினி நகல் - வா.சா.ஆ.4. |
| 5. | 02-01-2007 | முத்துப்பிள்ளை என்பவரின் இறப்பு சான்று - அசல் - வா.சா.அ.5. |
| 6. | 19-03-2012 | அமுதம்மாள் என்பவரின் இறப்பு சான்றிதழ் - அசல் - வா.சா.ஆ.6. |
| 7. | 14-08-2008 | கோவிந்தராஜ் என்பவரின் இறப்பு சான்றிதழ் - அசல் - வா.சா.ஆ.7. |
| 8. | - | முத்துப்பிள்ளை என்பவரின் வாரிசு சான்று - இணைய வழி நகல் - வா.சா.ஆ.8. |
| 9. | 09-05-2022 | திருவண்ணாமலை சட்ட பணிகள் குழுவிலிருந்து வந்த கடிதம் - அசல் - வா.சா.ஆ.9. |
| 10. | - | சென்னை சட்ட பணிகள் குழுவிலிருந்து வந்த கடிதம் - அசல் - வா.சா.ஆ.10 |
| 11. | - | தமிழ்நாடு சட்டப்பணிகள் ஆணை குழுவிலிருந்து வட்ட கடிதம் - வா.சா.ஆ.11. |
| 12. | 15-06-2022 | திருவண்ணாமலை சட்டப்பணிகள் ஆணைக்குவிலிருந்து வந்த கடிதம் - வா.சா.ஆ.12. |

| வ.எண். | தேதி | ஆவணங்கள் |
|---|---|---|
| 13. | 23-06-2022 | செய்யாறு சட்டப்பணிகள் ஆணைக்குழுவிலிருந்து வந்த கடிதம் – வா.சா.ஆ.13. |
| 14. | 15-03-2006 | தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.14. |
| 15. | 24-11-2011 | 1-ம் பிரதிவாதி 5-ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தின் இணைய வழி நகல் – வா.சா.ஆ.15. |
| 16. | 24-11-2011 | 1-ம் பிரதிவாதி 6-ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தின் இணைய வழி நகல் – வா.சா.ஆ.16. |

எனவே, தாவாப்படி தீர்ப்பாக வேண்டி பிராத்திக்கிறேன்.

**குறுக்கு விசாரணை :–**

(1 முதல் 4 மற்றும் 5, 6 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஓம்/– M. விக்னேஷ் பிரபு
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**